

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், மாதவரம் மற்றும் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### "தமிழ்நாடு யாருடன் போராடும்?"

## ஆளுநருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

### துண்டறிக்கையாக செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில் விநியோகம்!

செஞ்சி, அக்.19-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழ்நாடு யாருடன் போராடும் என்ற ஆளுநர் ஆர்.என்.ரவியின் கேள்விக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதில் அளித்த துண்டறிக்கையைபொது மக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி கோணை, மேல் எடையாளம் ஊராட்சியில் நடைபெற்றது.


நிகழ்ச்சிக்கு செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.


நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு தமிழ்நாடு யாருடன் போராடும் என்ற ஆளுநர் ஆர்.என்.ரவியின் கேள்விக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் அடங்கிய துண்டு பிரசுரங்களை வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் வழங்கி முதலமைச்சர் சொன்ன பதிலை பொதுமக்களிடம் விளக்கி கூறினார்.

### சாலை விபத்தில் மரணமடைந்த நாமக்கல் கிழக்கு - காஞ்சி தெற்கு மாவட்ட

# கழகத் தோழர்கள் இருவரின் குடும்பங்களுக்கு - தலா ரூ. 10 இலட்சம்!

## கழகம் சார்பில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!




**சென்னை, அக்.19-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த நாமக்கல் கிழக்கு மாவட்டம் கு.சரண்ராஜ் மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் எஸ்.பிரகாசம் ஆகிய இரண்டு குடும்பங்களுக்கும் தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 20 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். இதுவரை 8 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.80 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.**

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், கடந்த 2.8.2025 அன்று விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா 12.6.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்செல்வன் 23.7.2025 அன்று ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் 5.6.2025 அன்று திருவாரூர் மாவட்டத்தைச் எம்.விக்னேஷ் 5.6.2025 அன்று கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி 23.7.2025 அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் ஆகிய 6 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து; 2.6.2025 அன்று நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான கு. சரண்ராஜ் அவர்கள், நாமக்கல் சேந்தமங்கலம் சாலை, வீசாணம் பிரிவு ரோடு அருகில் வாகன விபத்தில் சிக்கியும் 6.9.2025 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான எஸ்.பிரகாசம் அவர்கள், கீழ்அம்பி காஞ்சிபுரம் சாலையில் இடதுபுறம் சென்றபோது வாகனம் மோதியும் சம்பவ இடத்திலேயே இவ்விரண்டு பேரும் உயிரிழந்து விட்டனர்.

விபத்தில் சிக்கி உயிரிழந்த மேற்சொன்ன இருவரின் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் பத்து இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூபாய் 20 இலட்சத்திற்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், நாமக்கல் கிழக்கு மாவட்டம் கு.சரண்ராஜ் அவர்களின் மனைவி திருமதி ச.ராசாத்தி அவர்களிடமும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் எஸ்.பிரகாசம் அவர்களின் மனைவி திருமதி பி. பிரியா அவர்களிடமும் நேற்று (18.10.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

### நீதிமன்ற அவமதிப்பு வழக்கில்

## அமலாக்கத்துறை அதிகாரிகள் நேரில் ஆஜராக வேண்டும்!

### உயர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, அக்.19-

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அமலாக்கத்துறை மேல்முறையீட்டு ஆணைய தலைவர் மற்றும் பதிவாளர் நேரில் ஆஜராக சென்னை உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது. சினிமா தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன் மற்றும் தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரனுக்கு சொந்தமான இடங்களில் சோதனை நடத்திய அமலாக்கத்துறை, ஆகாஷ் பாஸ்கரனிடம் இருந்து ஆவணங்கள் பறிமுதல் செய்தனர். இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், ஆகாஷ் பாஸ்கரனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களை திரும்ப ஒப்படைக்க உத்தரவிட்டது.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதாக, அமலாக்கத்துறை சார்பில் உயர்நிதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அப்போது ஆகாஷ் பாஸ்கரன் தரப்பு வழக்கறிஞர், உயர்நீதிமன்ற தடை உத்தரவு உள்ள நிலையில், கடந்த செப்டம்பர் 20ம் தேதி நோட்டீஸ் அனுப்பி அக்டோபர் 8ம் தேதி வழக்கின் இறுதி விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையம் நோட்டீஸ் அனுப்பியதாக தெரிவித்தார். இதை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அமலாக்கத்துறை மேல்முறையீட்டு ஆணைய தலைவர் பிரதீப் குமார் உபாத்தியாயா மற்றும் நிர்வாக பதிவாளர் நஸ்ரின் சித்திக் ஆகியோர் நேரில் ஆஜராக உத்தரவிட்டுள்ளனர்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 15, 16, 17 ஆகிய வட்டங்களில் உள்ள அரசு மற்றும் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கும் காலை உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தாய்மார்களுக்குப் புடவை,அரிசி, இனிப்பு,பட்டாசு மற்றும் ரொக்க பணம் வழங்கப்பட்டது. 16வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன்,என். மகேஷ் குமார், மணலி புதுநகர் சி.எம்,ராஜா, சாம்ராஜ், யாசின், தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ - கே.ஏழுமலை எம்.சி. முன்னிலையில்

## தியாகராயர் நகர் 135 வது வட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்- நலத்திட்ட உதவிகள்!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரை! புதூர் ஆர்.லோகு அறிக்கை!

சென்னை, அக். 19

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 135 வது வட்டக் கழகப் பொறுப்பாளர் புதூர் ஆர்.லோகு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 135 வது வட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (19.10.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில், அசோக்நகர், 7 வது ஆவென்யூ, பிரியதர்ஷினி ஹாலில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு 135 வது வட்டக் கழகப் பொறுப்பாளர் புதூர் ஆர்.லோகு தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சிக்கு தியாகராயர் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தியாகராயர் நகர் கிழக்கு பகுதிச் செயலாளர் ஜெ.கருணா நிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ, கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் கோ.சு. மணி, தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஷ்வரன் எம்.சி, ஜி.டி.அம்பேத்கார், வி.பி.எஸ்.ஜனார்த்தா, எம்.பி.மாறன், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் மு.செல்வ குமார், மு.ம.செந்தில்கு மார், எம்.கே.மூர்த்தி, ஜி.பி.செந்தில்குமரன், லலிதாபுரம் என்.துரை, எஸ்.லட்சுமிகாந்தன், தியாகராயர் நகர் மேற்குப் பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் தட்சன்.ஹரிஹரன், டி.கமல், ந.மோ. முரளி, வெல்டிங் கே.ராஜா, பி.மாரி, பி.நாணு (எ) ஜெய்குமார், வட்டக் கழக நிர்வாகிகள் எஸ்.பாரதிராஜா, டி. ஸ்ரீதர், என்.ஸ்ரீதர், இ.வடிவேலு, டி.மணிமாறன், வி.பி. எஸ்.ஜெயசீலன், எல்.அருண்குமார், ராஜேஸ்வரி பரமசிவம், எம்.அன்புரோஸ், எம். கஜேந்திரன், எஸ்.சந்தோஷ்குமார், கே.பாலாஜி, எஸ்.சத்தியன், குட்டி (எ) செல்வராஜ், எம்.முனிவேல், என்.சுகுமார், சி.பிரசன்னா, கே.எம்.கிரி, ஆடியோ ஆனந்த், மா.வாசு, என்.ராஜா, எம்.ஆறுமுகம், எஸ்.ஹரிசந்திரன், ஏ.வெற்றி, எஸ்.பாலு செல்வம், டி. நரேன், எஸ்.வடிவேலு, பைலட் பிரேம்குமார், என். புவியரசு, முகம்மது அன்சாரி, எம்.ரவி, கோகுல், வி. சசிகுமார், எஸ்.அஜித்குமார், எஸ். தினேஷ்குமார், பரமசிவம் கே.சபிநேசன், எஸ்.அசோக்குமார், கே.சொர்ணபுஷ்பம், பி.கௌரி, எஸ்.மலர், ஆர். தனலட்சுமி, பாக்கியலட்சுமி, எஸ்.கலைவாணி, வி.ரேகா, பி.மணிமொழி, பரவதம், எஸ்.சகிலா, ஜெ.சாமுண்டீஸ்வரி, மாவட்டப் பிரதிநிதிகள், பல்வேறு அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியின் இறுதியில் ஏ.வெற்றி, நா.புவியரசு, இரா.செ.பாலு செல்வம் நன்றி கூறுகின்றனர்.

இவ்வாறு 135 வது வட்டக் கழகப் பொறுப்பாளர் புதூர் ஆர்.லோகு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



துறைமுகம் சட்டமன்ற தொகுதி 59,59அ வட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் 3000 நபர்களுக்கு 10 கிலோ அரிசி, சேலை, லுங்கி, இனிப்பு மற்றும் பரிசுத் தொகையினை மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கி சிறப்புரையாற்றினார். எஸ்.முரளி, இரா.நரேந்திரன்,பி. ஸ்ரீராமுலு.கே.ஆர்.அபரஞ்சி, டி.சதிஷ்குமார் ,வே.பா பிரபாகரன் லண்டன் முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.